திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடிநீர் வடிகால் வாரியம் நீண்டகாலமாகச் செயல்பட்டு வருகிறது. இருந்தும் இந்த வேலையில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அங்கிருக்கிற மக்கள் தண்ணீருக்காக மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனால் உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஜூன் 1981-ல் வேலை முடியும் என்று சொல்லியிருக்கிறேன். மார்ச் மாதம் வந்துவிட்டது. இன்னும் மூன்று மாதங்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருள்கூர்ந்து பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் தொழிலாளர் காலனிகளில் கட்டப்பட்டுள்ள வீடுகள்.

*வினா எண். 369—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மானியத்துடன் கட்டப்பட்ட மதுரை மாவட்டத்திலுள்ள பசுமலை," பரவை, கப்பலூர் ஆகிய மில் தொழிலாளர்களின் காலனியிலுள்ள வீடுகளை குடியிருக்கும் தொழிலாளர்களுக்கு கட்டப்பட்ட விலையில் 80 சதவிலைக்கு கொடுத்து விடலாமென மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு ஆலோசனை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) மற்றும் (ஆ) ஆம். தொழிலாளர் மானிய வீட்டு வசதி திட்டத்தின்கீழ் தனியார் துறையில் கட்டப்பட்டுள்ள வீடுகளை அவற்றில் குடியிருப்பவருக்கு விற்பது விரும்பத்தக்க செயல் இல்லை என்று கருதி இவ்வரசு அவ்வாறு விற்கலாம் என்று மத்திய அரசின் பரிந்துரையை ஏற்கத் தேவையில்லை என்று முடிவு எடுத்து, இந்த முடிவை மத்திய அரசுக்கும் தெரிவித்துள்ளது.

1981 மார்ச் 4]

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று ஆலைகளும் மதுரை மாவட்டத்திலே இருக்கின்றன. கப்பலூர், திருமங்கலம் தொகுதியிலே இருக்கிற ஆலை ஏன் பல ஆண்டுகாலமாக அந்த ஆலைகளில் வேலைகளில் இருப்பவர்களுக்கு, அதே வீடுகளில் குடி இருப்பவர்களுக்கு அந்த வீடுகளை கொடுப்பதற்கு அரசாங்கம் விரும்பவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இது வாடகைக்கு குடியிருப்பதற்காக கட்டப்பட்டது. இருக்கக்கூடியவர்களுக்கு அந்த வீடு சொந்தமென்று ஆகிவிட்டால், தங்களுடைய பெயர்களை பதிவு செய்து கொண்டு லிஸ்டில் இருப்பவர்களுக்கு எந்த காலத்தில் வீடு கிடைக்கும்? எனவே, அவர்களுக்கு வாடகைக்கு என்று கொடுத்துவிட்டால், அவர்கள் ரிடையர் ஆகும்போது, அல்லது வேறு வேறு காரணத்திற்காகவோ அவைகள் காலி ஆகும்போது லிஸ்டில் இருக்கிற தொழிலாளர்களுக்கு கிடைக்க ஏதுவாக இருக்கும். ஆகவே ஒரு முறை நுழைந்து விட்டால், அவர்களுக்கு சொந்தமாகி விட்டால், புதிதாக தொழிலாளர்களுக்கு வீடு கொடுக்க முடியாது.

திரு. எல். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழிலாளர்களுக்கு அவர்களுக்கு குடியிருப்பதற்கு வீடுகளை கொடுக்கிற போது அவர்களிடத்திலிருந்து உரிய பணத்தைப் பெற்றுக் கொண்டு தான் கொடுக்கிறார்கள். வீடு நெருக்கடி இருக்கும்படியான இந்த நேரத்தில், நம்முடைய நாட்டில் தொழிலாளர்களுக்கு உரிமைகள் இல்லாத ஒரு சூழ்நிலையில் இந்த சிறிய வீட்டை அவர்களுடைய பணத்தைப் பெற்றுக் கொண்டு கொடுப்பதிலே என்ன சங்கடம் இருக்கிறது? இந்த பண வருவாயை வைத்துக் கொண்டு புதிய காலனிகளை நிர்மாணிப்பதற்கு இதிலே வசதி இருக்கிறதே ; இதனால் நம் மாநில அரசு மத்திய அரசின் இந்த நிலைக்கு ஏன் தடையாக இருக்க வேண்டும் என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் தடையாக இல்லை. மத்திய அரசு எழுதி இருக்கிறார்கள். It is only a suggestion என்று. 500 வீடுகள் இருக்கின்றன என்று வைத்துக் கொள்ளுங்கள். அவற்றிலே, 500 தொழிலாளர்கள் குடியிருக்கிறார்கள். அந்த 500 தொழிலாளர்களே காலாகாலத்திற்கும் அங்கே குடியிருப்பார்கள் என்றால் ஏற்கெனவே அந்த வீடுகளுக்காக பதிவு செய்திருக்கிற தொழிலாளர்கள், வெயிட்டிங் லிஸ்டிலே இருக்கின்றவர்கள், அந்த வீடுகளுக்குக் குடி போகமுடியாது. ஏற்கெனவே இருக்கின்றவர்கள் ரிடையர் ஆனால் அல்லது இறந்து

விட்டால்தான் அந்த வீடுகள் காலியாகும். அப்போதுதான் வெளியே காத்துக்கொண்டிருக்கிற புதிய தொழிலாளர்கள் அங்கே போய் குடிபோகமுடியும். அதற்காகத்தான் அந்த வீடுகள் இருக்கின்றன.

திரு. ப. நெடுமாறன் : தொழிலாளர்கள் குடியிருப்புகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முக்கியமான பாலிசி அனவுன்ஸ்மென்ட்டை செய்திருக்கிறார்கள். மதுரை மாநகராட்சி எழுத்தர்களுக்கு குடியிருப்புகளை அந்த எழுத்தர்களுக்கே மாநகராட்சி கொடுத்திருக்கிறது. ஆனால் அங்கே வேலை செய்யும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு அந்தக் குடியிருப்புகளை கொடுப்பதற்கு முன்வரவில்லை. ஏற்கெனவே எழுத்தர்களுக்கு கொடுத்திருக்கிற அந்தச் சலுகைகளை கீழ் மட்டத்திலே இருக்கின்ற தொழிலாளர்களுக்கும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கும் அளிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நாம் இப்போது பேசிக் கொண்டிருப்பது மாநில அரசின் கொள்கைப்பற்றி. இந்த மாநில அரசு மத்திய அரசிடமிருந்து கடிதம் வந்தபொழுது பரிசீலனை செய்தது. அவைகள் வாடகை வீடுகள். It is not a hire-purchase system. It is only a rental scheme. Rent l scheme என்ற முறையிலே வாடகை வீடுகள் என்று தான் குடிபோகிறார்கள். அவர்களைத் தவிர வெளியே இருக்கிற எஞ்சிய தொழிலாளர்களுக்கும் அந்த பலன் கிடைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடுதான் 'ரெண்டல் ஸ்கீமை' 'ரெண்டல்' ஸ்கீமாக வைத்திருக்கிறோம். மதுரையிலே hire purchase-ல் Lower-income group, M.I.G., economically weaker sections என்ற அடிப்படையிலே வீடு கட்டுகிறோம். அதிலே இவர்கள் பதிவு செய்து அந்த வீடுகளை பெறலாம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வேகவதி—பாலாறு இணைப்புத் திட்டம்.

*வினா எண் 370—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேகவதி-பாலாறு இணைப்புத் திட்டத்திற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் பாசனத் தலைமைப் பொறியாளரின் முதல் நிலை-ஆய்வில் உள்ளதால், திட்ட மதிப்பீடு பற்றிய விபரங்கள் தற்போது இல்லை.